Registered as a Newspaper

திருத்துத
ரேடியோ; T.V
மற்றும் வீட்டுப்
பாவனைக்கான மின்சார
உபகரணங்களைச் சிறந்த
முறையில் திருத்த
டைனமிக் எஞ்ஜினியரிங்
லிமிட்டெட்
476, பிரதான வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை


0 சமைக்க 0 விளக்கெரிக்க
0 நீர்இறைக்க
எரிவாயு
சாதனம்
அமைத்திடுவீர்!
அமைத்துத் தருபவர்கள்,
டைனமிக் எஞ்ஜினியரிங்
லிமிட்டெட்
476, பிரதான வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

மலர் 1 யாழ்ப்பாணம் ஆனி 03 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வால் பிறை 08 (17-06 1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY இதழ்: 180

கொழும்பிலிருந்து வந்த

# யாழ். பஸ்களை படையினர் திருப்பி அனுப்பினர்

## கண்டிவீதியால் வராது வேறுவழி வந்ததிற்கு 'தண்டனை'!

யாழ்ப்பாணம், ஜூன் 17

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த பஸ்கள் ஆனையிறவில் வைத்து மாங்குளம் வரை போய் வருமாறு திருப்பி அனுப்பப்பட்டன. அவை கண்டி வீதியால் கிளிநொச்சியைத் தாண்டி வரவில்லை என்பதற்காகவே சிப்பாய்கள் இந்தத் தண்டனையை வழங்கினர்.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது--

கொழும்பிலிருந்து புல்லைத்தீவுப் பாதையூடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்த நான்கு தனியார் பஸ்கள் ஆனையிறவு தடைமுகாமில் வைத்து சிப்பாய்களினால் மறிக்கப்பட்டன.

கண்டிவீதியூடாக கிளிநொச்சி மாங்குளம் இராணுவ முகாம்கள் வரை திரும்பிச்சென்று முகாம்களில் கையெழுத்து வாங்கி வருமாறு இந்த பஸ்களை சிப்பாய்கள் பணித்தனர்.

இதனை அடுத்து இந்த நான்கு பஸ்களும் திருப்பி பயணிகளுடன் கிளிநொச்சி, மாங்குளம் முகாம்நோக்கி கண்டி வீதியூடாகச் சென்றன. பரந்தன் சந்தியில் இந்த பஸ்களை வழிமறித்த போராளிகள் பஸ்களை மேலே போக விடாது தடுத்தனர்.

எனினும் மாங்குளம் முகாம்வரை சென்றுவர சாரதிகள் முயற்சி எடுத்தும் அது கைகூடவில்லை.

வீதிகளில் தடை ஏற்படுத்தப்பட்டிருந்ததே இதற்குக் காரணம். இந்த பஸ்கள் நான்கும் பிரயாணிகளுடன் மீண்டும் ஆனையிறவு முகாமை வந்தடைந்தன.

இதனை அடுத்து பஸ்கள் சாரதிகளுடன் ஆனையிறவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டன.

பிரயாணிகள் அனைவரும் அங்கு நின்ற லொறிகளில் சிப்பாய்களினால் ஏற்றப்பட்டு அனுப்பப்பட்டனர்.

யாழ்ப்பாணத்துக்கு இரவு எட்டு மணி அளவில் இந்த லொறிகள் வந்து சேர்ந்தன. (இ-10)

### ஊரடங்கு

கொழும்பு, ஜூன் 17

திருகோணமலை நிர்வாகமாவட்டத்தில் நேற்றும் இரவு 7 மணிமுதல் ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்டது.

இன்று காலை 5மணிக்கு ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டது. (இ-எ)

முச்சந்திமுரளி



வசதியான பாதையாலே வாகனத்தைச் செலுத்தி வாறதுக்கும் தமிழனுக்குச் சுதந்திரம் இல்லையப்பா இந்த நாட்டிலே ..!

இந்த அக்கிரமங்கள் கனநாளைக்கு நிலைக்காது எண்டதை மறந்து போகினமே அவை. !

### மண்டைதீவை நோக்கி பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம் ஜூன் 17

மண்டைதீவுப் பகுதியை நோக்கி நேற்று பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மண்டைதீவுக் கடற்பிராந்தியத்தில் நங்கூரமிட்டிருக்கும் பெரிய கப்பலில் இருந்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிய வருகிறது.

இதனை அடுத்து மண்டைதீவு இராணுவ முகா

(4-ம் பக்கம் பார்க்க)

திருமலை மாவட்டத்தில்

# ஊரடங்கில் ஊர்காவலர் அட்டகாசம்

## தமிழர்களைக் கடத்தவும் முயற்சி முறியடிக்கும் பணியில் புலிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 17

திருகோணமலை மாவட்டத்தில், ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நேரங்களில் தமிழ்க் கிராமங்களில் ஊர்காவல் படையினர் அத்துமீறல்களும் அட்டகாசமும் புரிந்து வருகிறனர்.

சில தமிழ்க் கிராமங்களுக்குள் ஊர்காவல் படையினரோடு காடையர்களும் சேர்ந்து தாக்குதல்களை நடத்துவதாக அறியப்படுகிறது.

அவர்கள் அப்பாவித் தமிழ் மக்களின் உயிர், உடைமைகளுக்குச் சேதம் விளைவிப்பதோடு பலரைக் கடத்திக் கொண்டு காடுகளுக்குச் செல்வதாகவும் அறிய வந்துள்ளது

இவற்றைத் தடுத்து நிறுத்துவதில் தமிழீழ விடுதலைப் புலிகள் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது

நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் ஐந்து ஊர்காவல் படையினரை தமிழீழ விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றதாக அறிய வந்துள்ளது

ஊர்காவல் படையினர் தமிழ்க் குடும்பங்களைக் கடத்த முயன்ற ஒரு சம்பவத்தைப் போராளிகள் எதிர்த்து முறியடித்தனர்.

கடத்திச் செல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களைக் காடுகளில் இருந்து நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மீட்டனர்.

அவ்வேளை ஊர்காவற் படையினருடன் விடுதலைப் புலிகள் நேருக்கு நேர் மோதலில் ஈடுபட்டதாகவும் ஊர்காவல் படையினரிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் —

திரியாய், சாம்பல் தீவு, ஆறும் கட்டை, தம்பலகாமம், கன்னியா, ஆலங்கேணி, குப்புறுபிட்டி, நிலாவெளி ஆகிய கிராமங்களில் தமிழர்களைக் காப்பாற்றுவதில் போராளிகள் ஈடுபட்டிருந்தவர் என்றும் காடையர்களிடமிருந்து பல துப்பாக்கிகளை அவர்கள் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-அ-6)

### ஓமந்தை வந்த சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வவுனியாவில் இருந்து ஓமந்தை வரை நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் நேற்று நடைபவனியாக வந்தனர்.

கவச வாகனங்களும், இ.போ.ச பஸ்களும் அவர்களுடன் கூட வந்தன.

அவர்கள் நடந்துவரும் போது இடையில் அகப்

(4-ம் பக்கம் பார்க்க)

### சீனித்தட்டுப்பாடு இன்றோடு நீங்கியது

யாழ்ப்பாணம். ஜூன் 17

950 மெட்ரிக் தொன் சீனி இன்று (செவ்வாய்) காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வருகின்றது 'மாத்தறை' என்ற கப்பல் மூலம் வரும் சீனியை உடனடியாக கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் நிறுவனங்கள் மூலம் விநியோகிக்க உணவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ் குடாநாட்டில் தற்போது சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் கள்ளச் சந்தை விலைக்கும் சீனி விற்கப்படுகின்றது.

நாளை (புதன்) முதல் சீனித்தட்டுப்பாடு நீங்கிவிடும் என்று உணவுத் திணைக்கள வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (இ-எ)

# 19 வயது மாணவனை ஓடவிட்டு சுட்டனர்!

## பலாலி நோக்கிச் சென்ற சிப்பாய்கள் வெறியாட்டம்

பலாலி, ஜூன் 17

நேற்றுக் காலை தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து பலாலி முகாமுக்குச் சென்ற சிப்பாய்களின் சூட்டுக்கு இந்தி என்று அழைக்கப்படும் நல்ல தம்பி உதயசங்கர் (19 வயது) என்ற மாணவன் பலியானார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

நேற்று அதி காலை தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து பலாலி முகாமுக்கு சிப்பாய்கள் நடையாக வளலாய் ஊடாகச் சென்றனர்.

கடற்கரையோரமாகவும், வீதி வழியாகவும், வடக்குப் புறவெளி-தோட்டப் பகுதிகள் ஊடாகவும், சூட்டுச் சத்தம் இல்லாது சிப்பாய்கள் சென்றுகொண்டிருந்தனர்.

கடற்கரைப் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த சில மீனவர்களையும், தோட்டத்தில்நின்ற சில விவசாயிகளையும் சிப்பாய்கள் கைதுசெய்தனர். அச்சமயம் தனது தோட்டத்திற்குச் சென்று கடற்கரை வீதி வழியாக வந்த இடைக்காடு மகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவன் ஒருவரும் சிப்பாய்களிடம் அகப்பட்டார்.

முன்பு பிடிபட்ட மீனவரிடமும், விவசாயிகளிடமும் மாணவரைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மத்திய கல்லூரி மைதானத்தில் விழுந்த ஷெல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ் கோட்டையில் இருந்து நேற்றும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

நேற்றுக் காலை பத்து மணி அளவில் கோட்டை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று யாழ் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விழுந்து வெடித்தது.

இதனால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பதற்றமடைந்து காணப்பட்டனர்.

தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை. (இ-10)

### கிளிநொச்சியில் மோதல் தொடர்கிறது

#### மதகு குண்டுவைத்து தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

கிளிநொச்சியில் நேற்றும் குண்டுச் சத்தங்களும் துப்பாக்கி வெடிச் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

மூன்றாவது நாளாக சிப்பாய்கள் — புலிகள் மோதிக் கொண்டதாக சொல்லப்படுகிறது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது.

நேற்று மூன்றாவது நாளாக கிளிநொச்சியில் சிப்பாய்கள் முகாமை விட்டு வெளியேற முற்பட்டனர்.

இவர்களை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்றும் தாக்குதல் நடத்தினர்.

இரணைமடு-பூங்காவனம் சந்தி வீதியில் உள்ள மதகு ஒன்றை போராளிகள் குண்டுவைத்து தகர்த்தனர்.

இப்பகுதிகளுக்கு பறந்து வந்த குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

விமானத்தாக்குதல்களை அடுத்து மேலும் பல பொதுமக்கள் கிளிநொச்சியை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

நேற்று அரச அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன பாடசாலைகளும் நடைபெறவில்லை. வாகனப் போக்குவரத்துக்களும் கிளிநொச்சி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

17 — 6 — 1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்!

10 23 முதல் 11 53 வரை

ராகுகாலம்!

3 53 முதல் 4 23 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### வெளியூர் ஆசிரியர்கள் தீவுப்பகுதி செல்ல மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

பயண நிலைமை சீராகும் வரை தீவுப்பகுதிப் பாடசாலைகளில் கடமையாற்றச் செல்ல மாட்டோம்.

தீவுப்பகுதியை சொந்த இடமாகக் கொண்டிராத ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நேற்றுக்காலை கூடி மேற்கண்டவாறு தீர்மானித்தார்கள்

இத்தீர்மானம் கல்விப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது..

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

1. தீவுப்பகுதிப் பாடசாலைகளில் பணிபுரியும் தீவுப்பகுதியைச் சேர்ந்த இடமாகக் கொண்டிராத ஆசிரியர்களுக்கு விசேஷ விடுமுறை வழங்க வேண்டும்; அல்லது நிலைமை சீராகும் வரை தற்காலிக இடமாற்றம் வழங்க வேண்டும்.

2. தீவுப்பகுதியில் நீண்டகாலம் பணியாற்றியவர்களை சொந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்யவேண்டும்.

3. தீவுப் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்ட ஆசிரியர்களில் அநேகர் தங்கள் சொந்த வசதிகளுக்காக யாழ். நகரில் கடமையாற்றுகிறார்கள். அவர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

சிப்பாய்கள் சூடு

# மயிலிட்டியில் 3 வயது சிறுமி மூளைசிதறி மரணம்

காங்கேசன்துறை, ஜூன் 17

மயிலிட்டியில் நேற்று சிப்பாய்கள் சுட்டதில் மூன்று வயதுக் குழந்தை ஒன்று மூளை சிதறி இறந்தது.

தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து நடை பவனியாக காங்கேசன்துறை நோக்கி வந்த சிப்பாய்களே இச்செயலைச் செய்தனர்.

சிப்பாய்களைக் கண்டதும் மக்கள் கிலிகொண்டு ஓடினர்.

காணிக்கை மாதா கோயிலுக்கு அருகில் உள்ள வீடொன்றின் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மீது சூடு பட்டது.

டிலானி ஞானரத்தினம் எனும் இக் குழந்தை மூளை சிதறிய நிலையில் இறந்தது.

இதற்கிடையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட சிப்பாய்கள் காங்கேசன்துறை - யாழ்ப்பா

(4-ம் பக்கம் பார்க்க)

### வல்வெட்டித்துறையில் நூற்றுக்கணக்கான அகதிகள்

உடுப்பிட்டி, ஜூன் 17

வல்வெட்டித்துறையில் அண்மையில் இடம்பெற்ற மும்முனைத் தாக்குதல்களினால் நூற்றுக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் முந்நூறுக்கும் அதிகமான மக்கள் கரணவாய் தாமோதர வித்தியாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களுக்கான உணவு மற்றும் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் பலர் வரணி, பாலாவிசந்தி போன்ற இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

திருகோணமலையிலிரு

(4ம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் வடபகுதி இளைஞர் கைது

கொழும்பு, ஜூன் 17

காரில் சென்று கொண்டிருந்த ஐந்து வடபகுதி தமிழ் இளைஞர்களை கொள்ளுப்பிட்டியில் வைத்துப் பொலீஸார் கைது செய்தனர்

மனோகரன், இந்திரகுமார், சூரியகுமார், கணேஷ், பிரபாகரன் ஆகியோரே கைதானவர்கள் ஆவர்

கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (இ-எ-2)


### பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- டென்மார்க்
- சவூதி அரேபியா

(1) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்துதரப்படும்.

(2) சவூதி அரேபியாவுக்கு (Labourers) தொழிலாளர் பதவிக்கு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

(3) செல்ல விரும்புவோர் யூன் 25-ஆம் திகதிக்கு முன்பாக தொடர்புகொள்ளவும்.

(4) எமது பிரயாண முகவர் கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு உங்களை உடன் அழைத்துச் செல்வார்.

தொடர்பு: N. BALA

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

பி.கு. வழி இல: (764) பலாலி வீதி. கோண்டாவில் சந்திக்கு அருகாமை.


இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு செய்கையும் பாதிப்படையும்

## நிலத்தில் நோய்த் தொற்று

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் உருளைக் கிழங்குச் செய்கையை வாடல் நோய் தாக்கியது. இதனால் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தும் நிலம் முற்றாக நோய்த் தொற்றுக்கு உட்பட்டிருக்கிறது.

நோய்க் கிருமியின் தொற்றுக்கு உள்ளாகியிருக்கும் இத்தரையில் சிலகாலம் உருளைக்கிழங்குச் செய்கையைத் தவிர்ப்பதன் மூலம் தான் இந்நோயினால் ஏற்படக் கூடிய அழிவைப் போக்க முடியும் என்று விவசாய ஆராய்ச்சிப் பிரிவு சிபார்சு செய்திருக்கிறது.

சுமார் 1,500 ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடும் ஏறத்தாழ ஆறாயிரம் உருளைக் கிழங்குச் செய்கையாளர்களில் பெரும்பாலானோர் இதனால் பாதிப்பு அடைவார்கள் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

1983, 1984 ஆம் ஆண்டு செய்கையின் போது நோய் காரணமாகவும் வெள்ளம் காரணமாகவும் உருளைக் கிழங்கு உற்பத்தியில் 10 ஆயிரத்து 86 மெற்றிக்தொன் இழப்பு ஏற்பட்டது.

இதனால் ஒரு லட்சத்து 21 ஆயிரம் ரூபா நஷ்டமாகியது.

அடுத்த ஆண்டுச் செய்கையின் போதும் உருளைக் கிழங்கு உற்பத்தியில் பெருவீழ்ச்சி ஏற்பட்டது.

இவ்வாண்டில் விதை உருளைக்கிழங்கைத் திருவிப்பதிலும் முட்டுக் கட்டை நிலை ஏற்பட்டிருக்கிறது.

மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக நட்டம் ஏற்படுவதாலும், நோய்த் தாக்கத்தின் காரணமாகவும் இவ்வாண்டும் உருளைக் கிழங்குச் செய்கை பாதிப்படையலாம் என்று அஞ்சப்படுகிறது.

வெங்காயம் செய்கை மேற்கொள்ளப்படும் வலிகாமம் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளில் வெங்காயச் செய்கையும் ஒரு புதுவகை புழுவினால் பாதிக்கப் பட்டிருப்பதாக செய்திகள் வெளியானது தெரிந்ததே.

(உ-9)

## யாழ் ஆஸ்பத்திரியில் இரு லிப்றுகளும் பழுது நோயாளர் அவதி

யாழ்ப்பாணம். ஜூன். 17

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உள்ள இரண்டு ''லிப்ற்'' இயந்திரங்கள் கடந்த ஒரு வாரமாகப் பழுதடைந்த நிலையில் உள்ளன.

இதனால் கர்ப்பிணிப் பெண்களும், அவசர நோயாளிகளும் பெரும் சிரமப்பட வேண்டியிருக்கிறது.

5 ஆம், 6ஆம், 7 ஆம் 25 ஆம் வார்ட்டுகளின் பாவனைக்கு இருக்கும் லிப்றும், 1 ஆம், 2 ஆம், 3 ஆம் வார்ட்டுக்களின் பாவனைக்கு இருக்கும் லிப்றுமே பழுதடைந்தனவாகும்.

இதனால் மேல்மாடியில் உள்ள வார்ட்டுகளுக்கு நோயாளிகளைக் கொண்டு செல்லும் போது தூக்கிக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் போன்ற அவசர காயங்களுடன் வரும் நோயாளிகளும் இதனால் பெரும் கஷ்டப் படுகின்றனர்.

இந்த இரண்டு லிப்ற் இயந்திரங்களையும் திருத்துவதற்கு கொழும்பில் இருந்தே மெக்கானிக் மார் வரவேண்டி இருப்பதாகக் கூறப்படுகிறது.

### படப்பிடிப்பாளர் வந்தது எப்படி?

கொழும்பு, ஜூன் 17

'டைம்' சஞ்சிகையில் வெளியான படங்களை எடுத்த 'டைம்' புகைப் படப்பிடிப்பாளர் ஜேம்ஸ் நாச்வீ, சட்டவிரோதமான வழியில் தான் இலங்கை வந்தார்.

புலனாய்வு வட்டாரங்கள் இப்படித் தெரிவித்ததாகக் கொழும்பில் இருந்துவெளியாகும் ஆங்கில நாளிதழ் டெய்லி நியூஸ் செய்தி வெளியிட்டது.

தமிழ் நாட்டில் இருந்து சட்டவிரோதமாக இவர் யாழ்ப்பாணம் வந்தார்.

பின்னர் அதேவழியால் தமிழ்நாடு திரும்பினர்.

இலங்கையில் அவர் காணமற்போய் விட்டார் என 'டைம்' நிறுவனம் கவலைப்பட்டு கொழும்பு புதுடில்லி ஆகிய இடங்களில்உள்ள அமெரிக்கத் தூதரகங்களுடன் தொடர்புகொண்டது.

இப்படி 'டெய்லிநியூஸ் மேலும் கூறியது. (இ-எ)

## இன்றைய கட்டத்தில் கடவுள் நம்பிக்கை தேவை

### தங்கம்மா அப்பாக்குட்டி கூறுகிறார்

காங்கேசன்துறை, ஜூன் 17

இன்றைய சூழ்நிலையில் கடவுள் எமக்கு உதவவில்லையே என்று மக்கள் மத்தியில் ஒரு எண்ணம் உருவாகியிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஆனல் கடவுள் எம் இன்னல்களில் உதவுவார் என்ற நம்பிக்கை சகலரது மனத்திலும் ஏற்பட வேண்டும்.

இப்படிக் கூறினார் சிவத்தமிழ்ச்செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி.

மாதகல் நுணசைமுருகமூர்த்தி ஆலய இராஜ கோபுர அடிக்கல் நடும் வைபவத்தில் அவர் உரையாற்றினர்.

மாதகல் நுணசை இந்து சமய விருத்தி சங்கத் தலைவர். திரு.கந்தசாமி தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

ஆலயத்தில் கோபுரம் முக்கியமானது, கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று கூறுவார்கள்.

ஆலயத்தில் நுழையும் போது கோபுரமே முதலில் வழிபாட்டிடமாகிறது.

முன்பு நாயன்மார் காலத்தில் நடந்த அற்புதங்கள் இன்று நடக்கின்றன. அதற்கு உதாரணம் கொள்ளை போன நகைகள் மீண்ட விடயம். மக்கள் மத்தியில் இறை பக்தி வளர வேண்டும் இப்படி அவர் கூறினர்

சிவதர்ம வள்ளல் க. கனகராசாவும் உரையாற்றினர்.

ஆலய தர்மகர்த்தா க. கணபதிப்பிள்ளையும் க. பாலசுப்பிரமணியமும் அடிக்கல் நட்டனர்.

(இ - 68)

### காசிநாதன் மறைவுக்கு அனுதாபம்

சாவகச்சேரி, ஜூன். 17

அமரராகி விட்ட அதிபர் த. காசிநாதன் கல்விக்கும் கல்லூரி வளர்ச்சிக்கும் மாணவர்களது எதிர்கால நல்வாழ்விற்கும் அயராது உழைத்தவர். அவரது இழப்பு கல்வியை நேசிப்பவர்களுக்கு பெரும் இழப்பாகும்.

இவ்வாறு சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா கூறினர்.

மட்டுவில் சந்திரபுர விகந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் அவர் உரையாற்றினர்.

வித்தியாலய அதிபர் திரு. தி. இ. கணேசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

வட்டாரக் கல்வி அதிகாரி அமரர் திரு. த. காசிநாதனின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து மலர்மாலை சூட்டி கௌரவித்தார்.

(இ-31)

கிளிநொச்சிக்கு

## தென்னை மானியம் ரூபா 3 லட்சம்

கிளிநொச்சி ஜூன் 17

கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி பிராந்தியக் காரியாலயத்தினால் வழங்கப்படும் தென்னை மானியக் கொடுப்பனவுகளை வழங்க சுமார் 3 லட்சம் ரூபா பணத்தை தலைமைப் பீடம் அனுப்பிவைத்துள்ளது.

இப்பணத்திலிருந்து 1986 ஜனவரி மாதத்திற்குப் பின்னர் மானியம் பெறுபவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பண உறுதிச் சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க தெங்கு அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். மகேசன் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார். இதற்கிடையில் 86 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிராந்திய அலுவலகத்திற்கு மானியம் பெறுபவர்களினால் பண உறுதிச் சீட்டு கிடைக்கப் பெற்றும் பணம் வழங்கப்படாதவர்களுக்குரிய பணத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

இருபாலை கட்டப்பிராய் அருள் மிகு முத்து மாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவம் 11.6 1986 புதன் கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது.

21.6 86 சனி காலை தேர்த்திருவிழாவும் 22 6 86 ஞாயிறு தீர்த்தோற்சவமும் [illegible] திங்கள் பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறும்.

(இ—எ)

## சித்தாரா விருதுபெற்ற ஒளிப்பதிவாளர் கண்ணன்

சிறந்த ஒளிப்பதிவாளர் என்று தமிழ் நாடு அரசு விருதினையும் தெலுங்கு ஆலைகள் ஓய்வதில்லை படத்திற்காக ஆந்திராவில் சித்தாரா விருதும் பெற்றவர் கண்ணன்.

இவர் டைரக்டர் பீம்சிங்கின் மகன், அவர் சொல்கிறார்

'சில நேரஙகளில்சில மனிதர்கள்' படப்பிடிப்பில அப்பாவிற்குஉதவியாக என்னை நானே ஈடுபடுத்திக் கொண்டேன்.

வேறுவேலைகள் கிடைக்காதவர்கள் கடைசிப் புகலிடமாக சினிமாவைத் தேர்ந்து எடுப்பது போல் இன்றி இத்துறையை நன்கு புரிந்து கொண்டு, பின்னரே திரையுலகப் பிரவேசம் இருக்க வேண்டும் என்று எண்ணி அப்பா என்னை அடையாறு திரைப்பட கல்லூரியில் சேர வைத்தார்.

ஒளிப்பதிவுத் துறையில் பயிற்சி முடிந்ததும் கூடப் படித்த வெங்கையா என்பவரின் டைரக்ஷனில் ஒரு தெலுங்குப் படம் ஒளிப்பதிவு செய்தேன் படம் இதுவரை வெளியாக வில்லை.

'நதியைதேடிவந்த கடல்' படத்தில்எனது ஒளிப்பதிவுகளைப் பார்த்து, இளையராஜா பாரதிராஜாவிடம் சொல்ல, நான் பாரதிராஜ யூனிட்டில் இணைந்தேன்; என் கலையுலக வாழ்வில் இது தான்எனக்குத் திருப்புமுனை

திரைப்படக் கல்லூரியில் படித்த விஷயங்களை மனதில்கொண்டு இப்படிச் செய்தால் இப்படி ரிசல்ட்கிடைக்கும் என்ற ஓர் அனுமானத்தில் அலைகள் ஓய்வதில்லை சமயத்தில் காமிராவை இயக்கினேன்.

இப்போது இப்படிச் செய்தால் இதுதான் ரிசல்ட் என்பதை ஆணித்தரமாகத் தெரிந்து கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.




## பாடசாலையில் குண்டு விழுந்தாலும் பனைமரத்திற்கு கீழ் கல்விப்போதனை நடக்க வேண்டும்

### பணிப்பாளரின் விருப்பம் இது

வட்டுக்கோட்டை, ஜூன் 17

தமிழினம் இன்று உயிரிழந்து உடைமைகளை இழந்து, விடு வாசல்களை இழந்து தத்தளிக்கும் நிலையில் கல்வி ஒன்று தான் அழியாத சொத்தாக இருந்துவருகின்றது. எந்தக் கஷ்டம் வந்தாலும் அதனை வளர்க்க வேண்டும்.

பாடசாலைக் கூரையில் குண்டு விழுந்தாலும் பனை மரத்துக்குக் கீழ் பாடங்கள் நடைபெற வேண்டும்

ஆசிரியர்கள், அதிபர்கள் இதனைக் கருத்திற் கொண்டு தேவையற்ற சபவங்களை சாட்டாகக் காட்டி கல்வி வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக் கூடாது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட மாநிலக் கல்விப் பணிப்பளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மேற் கண்டவாறு கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

இன்றைய காலம் ஆண்டவனால் அளிக்கப்பட்ட ஒரு சோதனைக் காலம். இக்காலத்தைச் சாட்டாகக் கொண்டு கடமையிலிருந்து ஒரு போதும் தவறக்கூடாது.

இன்றைய சூழ்நிலையில் கல்வி ஆற்றலோடு உடல் நலம் பெற்றவர்களாகவும் மாணவர்கள் உருவாகவேண்டும். உடல் நலம் அற்றகல்வியால் எந்தவிதமான பயனுமில்லை. வீரர்களாக, துணிவுள்ளவர்களாக, அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாக, பண்புள்ளவர்களாக மாணவர்கள் உருவாகவேண்டும். இப்படி அவர் கூறினார்.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா, யாழ் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. கா. சந்திரராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

விளையாட்டுத்துறைச் செயலாளர் திரு. வி முத்துக்குமாரசாமி ஐயர் நன்றி நவின்றார்.

(உ-161)

## இராணுவப் பயிற்சி

கொழும்பு ஜூன் 17

ரயில்களில் கடமையாற்றும் பாதுகாப்பு ஊழியருக்கும் இராணுவப்பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது.

தேசிய பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து இந்த இராணுவப்பயிற்சி வழங்கப்படும்.

இத்தகவலை போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வெளியிட்டார்.

(உ - எ)


### வீடியோ திரைப்படம்

இது ஈழமண்ணின் இன்றைய கதை ஈழமண்ணின் கலாச்சார புரட்சியின் ஒரு புதிய அத்தியாயம். 'தமிழர் கலாச்சார வட்டம்' வழங்கும் 'தாயகமே தாகம்' 'வீடியோ திரைப்படம்) உங்கள் ஆதரவை நாடுகின்றோம். தமிழர் கலாச்சார வட்டம், யாழ்ப்பாணம். தொடர்பு: விளம்பர இலக்கம்: 21,மே/பா. உதயன், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## புரட்சிகர ஆன்மீகவாதி பாரதி அவரது நெறி வேதாந்த தத்துவம்

### 'தாயகம்' ஆய்வரங்கில் உரை

யாழ்ப்பாணம், ஜூன். 17

பாரதியார் ஒரு புரட்சிகர ஆன்மீகவாதி. அதற்குப் பின்னணியாக அமைந்தது வேதாந்தத் தத்துவம். அவர் பொருள் முதல் வாதக் கொள்கையைத் தழுவி இருக்க முடியாது.

நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற ''தாயகம்'' சஞ்சிகையின் ஆய்வரங்கில் உரையாற்றிய யாழ் மாவட்ட சிரேஷ்ட உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வரங்கிற்கு திரு. எஸ். தணிகாசலம் தலைமை வகித்தார்.

திரு. சண்முகலிங்கம் தொடர்ந்து கூறியதாவது—

பாரதியின் கவிதைகளைத் தழுவி நிற்கும் ஆன்மீக சிந்தனையைப் புறக்கணித்தால் அம்மகாகவியின் பூரண தரிசனம் நமக்குக் கிடைக்கமாட்டாது.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் சமய அடிப்படையில் மலர்ந்த தேசியவாதம் பாரதியையும் கவர்ந்தது. காந்தி, திலகர், விவேகானந்தர் ஆகியோர் இந்த நவீன இந்திய சிந்தனைப் பாரம்பரியத்தின் பிரதிநிதிகள்

— இவ்வாறு திரு. சண்முகலிங்கம் தொடர்ந்து கூறினர்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி சித்திரலேகா மௌனகுரு பின்வருமாறு குறிப்பிட்டார்:-

இன்று நமது மக்கள் மத்தியில் மலரும் கவிதைகள் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிப்பவையாக இருக்கின்றன

இன்று நம்மிடையே நிகழும் சம்பவங்களில் இருந்து பிறக்கும் கவிதைகளாக அல்லது அச்சம்பவங்கள் ஊடாக ஒரு கருத்தை, கோட்பாட்டை வலியுறுத்தும் கவிதைகளாக இவை காணப்படுகின்றன. இது ஓர் ஆரோக்கியமான அம்சம் —என்றார். அடுத்துப் பேசிய கவிஞன் இ. முருகையன் பின்வருமாறு கூறினர்:-

யாரும் நெருக்காமல், யாருடைய ஆணையும் இன்றி எழுத வேண்டும் என்ற உந்தலால் மட்டும் பங்களிப்புச் செய்கின்ற கவிஞர்கள் பாராட்டுக்கு உரியவர்கள்.

தேசிய கலை இலக்கியப் பேரவையினர் தாயகம் சஞ்சிகையை வெளியிடுவதுடன், பாரதி நூற்றாண்டினை ஒட்டி நடத்திய ஆய்வரங்கு நல்ல பயன்பாடுள்ள பங்களிப்பாகும் — என்றார்.

அடுத்துப் பேசிய தேசிய கலை இலக்கியப் பேரவை பிரமுகர் திரு அ. தேவராசா பின்வருமாறு கூறினர்:-

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் எம்மிடையே உள்ள முரண்பாடுகளை மூட்டை கட்டி மூலையில் வைத்துவிட்டு, எமது உடன்பாடுகளை முதன்மைப்படுத்தி ஒருமைப்பட்டு நாம் செயற்பட வேண்டும்.

— இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் திரு. தேவராசா.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பிரமுகர் திரு. கே. செந்திவேல் திரு. வி. பி. சிவநாதன் ஆகியோரும் கருத்துக்கள் வழங்கினர்கள்.

(உ - 9)

## கொழும்புத்துறை இந்து மாமன்ற சமய போட்டி முடிவு

சண்டுக்குளி, ஜூன். 17

கொழும்புத்துறை இந்து மாமன்றம் கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய தீர்த்தோற்சவ தினத்தன்று நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள்.

மூன்றும் வகுப்பு பிரிவு;-

முதலாமிடம்: செல்வி. ப கோகிலராணி. இரண்டாம் இடம்; செல்வி செ. கேதீஸ்வரி, மூன்றுமிடங்கள்; செல்விகள் கு. வனிதா, சி கலைமகள்.

நான்காம் வகுப்பு பிரிவு:-

முதலாமிடம்: செல்வி க. சோதிலெட்சுமி இரண்டாமிடம்: செல்வன் தெ தியாகேந்திரன் மூன்றுமிடங்கள்;- செல்விகள் தி சிவப்பிரியா சி. பத்மசோதி செல்வன் யோ. புவிரஞ்சன்.

ஐந்தாம் வகுப்பு பிரிவு;-

முதலாமிடம் செல்வி செ. மகேஸ்வரி இரண்டாமிடம் செல்வன் சி. சரவணகுகன் மூன்றுமிடங்கள்; செல்வன் க. விக்னேஸ்வரன் செல்வி;- க. சுமதி.

மத்திய பிரிவு;-

முதலாமிடம்:- செல்வி பா. சாந்தினி, இரண்டாமிடம் செல்வி தி. இராஜறாபினி மூன்றுமிடங்கள் செல்வி ச. பிரேமானந்தி செல்வி ப. பத்மசோதி.

மேற்பிரிவு:-

முதலாமிடம் :.செல்வன் ந. தயாசீலன் இரண்டாமிடம்;- செல்வி;. பா. பாமினி மூன்றுமிடம்;- செல்வி இ. நளினி [illegible] சிறப்புப் பரிசு செல்வி க. [illegible] வழங்கப்பட்டது.

(இ - ஒ)

## பிணை மறுப்பு

வான்கூவர், ஜூன் 16

பஞ்சாப் திட்டமிடல் அமைச்சர் கடந்த மே மாத இறுதியில் வான்கூவருக்கு விஜயம் செய்த பொழுது அவரைக் கொல்ல முயற்சி செய்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நான்கு சீக்கியர்களுக்கு பிரிட்டிஷ் கொலம்பியா மேல்நீதி மன்றம் பிணை அனுமதியை மறுத்துள்ளது.

(இ - ஒ)

## மக்கள் முகம்



### சித்தியம்புளியடி கலைச்செல்வி நிர்வாகிகள்

பலாலி, ஜூன் 17

தெல்லிப்பளை கிழக்கு சித்தியம்புளியடியில் பொதுமக்களால் கலைச்செல்வி என்ற புதிய சன சமூக நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

அவ்வூர் விழிப்பு மன்றமும் இளைஞர் கழகங்களும் இணைந்து அமைத்த இச் சனசமூக நிலையத்தின் நிர்வாகிகள் வருமாறு -

இதன் தலைவராக திரு. ஐ தனபாலசிங்கமும், உப தலைவராக திருமதி சி. செல்வராணியும், செயலாளராக செல்வி நா. மனோரஞ்சிதமலரும், உப செயலாளராக திரு. க ஞானகுணசேகரனும், பொருளாளராக திரு. வே கந்தசாமியும், தெரிவு செய்யப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் அ. ஜெயக்குமார், செ தவக்குமார், க சின்னராசா, ச. பாலகாந்தா செல்விகள்: அ. ஜெயலலிதா, சி புஷ்பலதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(இ-ஒ-119)

### கலாசார கூட்டுறவு பெருமன்ற நிர்வாகிகள்

யாழ்ப்பாணம். ஜூன் 17

கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் திரு. கே சிதம்பரப்பிள்ளை (சங்கத் தலைவர்) செயலாளர். திரு. ஐ. விநாயகமூர்த்தி.

அமைப்பாளர் நெல்லை க பேரன்.

செயற்குழு; திருவாளர்கள் செ. சதானந்தன், தெணியான், த கலாமணி, சட்டத்தரணி ஏ.கே. நடராசா, குப்பிழான் ஐ சண்முகன்.

வெகுவிரைவில் பிரதேச எழுத்தாளர்களின் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூல் ஒன்றை வெளியிடுவதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(இ)

### பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

கைதடி நாவற்குழி என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற அச்சலிங்கம் வியாசன் என்பவரின் மரண சாதனம் எழுதப்பட்ட மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன ) இல. நியாயாதிக்கம்) றி/278

பொன்னையா சிவசுப்பிரமணியம் சித்தன்கேணி

மனுதார்

எதிராக

1. பொன்னையா சிவசுப்பிரமணியம் பெண் குமுதினி சித்தன் கேணி
2. அச்சலிங்கம் வியாசன் கைம்பெண் சகுந்தலா இளாக்கர் ஒழுங்கை, அச்சுவேலி.
3. கந்தையா பரராஜசிங்கம் கைம்பெண் சாரதா, சித்தன் கேணி.
4. மாணிக்கவாசகர் பொன்னம்பலம் கைம்பெண் மகேஸ்வரி, சித்தன்கேணி.
5. ஆறுமுகம் குமாரசாமி கைம்பெண் சரோஜினி, மாரீசன் கூடல், இளவாலை.

எதிர்மனுதார்கள்,

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ஆம் ஆண்டு யூலை மாதம் 2-ம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு யூன் மாதம் 11ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி

வி இராமச்சந்திர ஐயர்

பதிவாளருக்காக

வரைவு:

க. குணரத்தினம்

மனுதாரின் சட்டத்தரணி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

இறைவனுடைய படம் அவனது நிழல் அல்லவா! நீ அதன் முன் பிரார்த்தனை செய்து கொண்டே இருக்குங்கால், அவன் அப்படத்தின் மூலம் உனக்குக் காட்சியளிக்கின்றன்.

—அன்னை சாரதாதேவி.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல. 15 ஈறை ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 17-06-86 தொலைபேசி 24805 22078 உ. இல 23


## வடக்கும்- கிழக்கும் இணையாத தீர்வு வேண்டாம்

சிங்களப் பெண்மணி ஒருவர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் சம்பந்தமாக ஒரு மனுவைத் தொடர்ந்திருக்கிறார்.

தமக்கு விருப்பமில்லாத ஓர் இடத்தில், தன்னையும் குடும்பத்தையும், அரசாங்க அதிகாரிகள் கட்டாயப்படுத்தி குடியமர்த்த நிர்ப்பந்திக்கிறார்கள் என்பதே அந்தப் பெண்ணின் முறையீடாகும். அவ்வாறு செய்யக்கூடாது என்று அரசாங்கத்துக்கு உத்தரவிடுமாறு கோருவதே உயர் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவாகும்.

இவ்விடயம் நீதிமன்றத்துக்கு வந்ததால் அதில் உள்ள விவரங்களை இங்கு ஆராய்வது விரும்பத்தக்கதல்ல.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பான்மை இன மக்கள் எவ்வாறு திருகோணமலை மாவட்டத்தில் கொண்டு வந்து குவிக்கப்படுகிறார்கள். அவர்களது சொந்த விருப்பத்துக்கு மாறாகவும், அரசாங்கத்தால் கட்டாயப்படுத்திக் குடியேற்றப்படுகிறார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்.

கிழக்கு மாகாணத்தை, குறிப்பாகத் திருகோணமலையைத் தமிழர் பிரதேசமாகத் தொடரவிடாமல், பெரும்பான்மையினரின் பிரதேசமாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. எல்லா வகைகளாலும் — வழிகளாலும் அதற்காகச் செயற்பட்டு வருகிறது.

இன்று நேற்றல்ல, டி எஸ் சேனநாயக்கா காலத்திலிருந்தே இது நடந்து வருகிறது. கிழக்கு மாகாணத்தை தமிழ் பேசும் மாவட்டம் என்று கூடச் சொல்வதற்கு இடம் வைக்கக் கூடாது என்பது தான் சிங்கள அரசாங்கங்களின் உள் நோக்கம்.

அம்பாறையில் தீகவாபி புனித பிரதேசம் என்ற பெயரில் முஸ்லிம்களின் காணிகள் சட்டரீதியாகக் கொள்ளையடிக்கப்பட்டன.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் பெரும்பான்மை மக்களைக் குடியேற்றி அவற்றைச் சிங்களவர் மயப்படுத்திவிடக் கடந்த 38 வருடங்களாகச் சதி நடந்து வருகிறது.

கிழக்கில் பரம்பரை பரம்பரையாக, ஆண்டாண்டு காலமாக, வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம் மக்களை எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்கள் ஆக்கும் சதி தொடர்கிறது அவர்களின் பூமிகளைப் பறித்துச் சிங்கள மக்கள் குடியேற்றப்படுகிறார்கள்.

சிங்கள மக்களிலும் பலர் அவர்களின் சொந்த விருப்பத்துக்கு மாறாக கட்டாயப்படுத்தியே குடியமர்த்தப்படுகிறார்கள் என்பது இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

அரசாங்க அலுவல்கள் சிங்கள மயமாக்கப்பட்டுவிட்டன. அரச அலுவலகங்களும் அனேகமாகச் சிங்களவர் மயமாக்கப்பட்டுவிட்டன. முப்படைகள் சிங்களவர் மயமாக்கப்பட்டுவிட்டன. இன்னும் பல துறைகள் சிங்கள மயமும் சிங்களவர் மயமும் ஆகிவிட்டன. அதே போன்று இலங்கை முழுவதையும் சிங்களவர் மயமாக்க வேண்டும் என்ற ஆசை சிங்களத் தீவிரவாதிகளுக்கு மட்டும் இல்லை, சிங்கள அரசாங்கங்களுக்கும் உண்டு.

தமிழர்களின் தாயகம் வடக்கும், கிழக்கும். அவை இரண்டையும் இணைக்க அனுமதிக்க முடியாது என்று சிங்கள அரசுகள் அழுங்குப் பிடி பிடிப்பதற்குக் காரணம் இப்போது தெளிவாகிறதல்லவா?

முழு இலங்கையையும் சிங்கள மயமாக்கும் உள்நோக்கத்துக்கு, வடக்கு — கிழக்கு இணைப்பு குந்தகமாக இருக்கும் என்பதாலேயே அதனைப் பற்றி நினைத்துப் பார்க்கவும் தயாரில்லை என்ற நிலையை இப்போதைய அரசு கடைப்பிடித்து வருகிறது.

ஒருவர் தமக்குப் பாதுகாப்பான, வசதியான இடம் என்று கருதும் இடத்தை விலை கொடுத்து வாங்கி அங்கு குடியேறுவது வேறு. ஒருவருக்குச் சொந்தமான காணியை, அடாத்துச் செய்து பறித்து, இரண்டாமவருக்கு கொடுத்து அவரது விருப்பத்துக்கு மாறாக அங்கு குடியமர்த்துவது வேறு.

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மக்களை அரசாங்கம் குடியேற்றி வருவது இரண்டாவது வகையைச் சேர்ந்ததாகும். அது அநீதி, அநியாயம் மட்டுமன்றி வம்புத்தனமும் ஆகும்.

முழு இலங்கையையும் சிங்களவர் மயமாக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை இனியாவது சர்வதேசங்கள் புரிந்து கொள்ளட்டும்.

வடக்கும், கிழக்கும் இணைந்த பகுதிகளின் நிர்வாகத்தைத் தாங்களே நடத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புவது எதற்காக என்பதும் சர்வதேசங்களுக்கு இப்போது புரியவேண்டும்.

இத்தனைக்குப் பிறகும் வடக்கு வேறு, கிழக்கு வேறாக உள்ள ஓர் அமைப்பில் நிர்வாகப் பரவலாக்கல் செய்வதை தமிழர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எவரும் கருத்துக் கூறவும் முடியாது; கூறவுங் கூடாது.

தமிழர் தாயகம் ஒருசேர அவர்களது நிர்வாகத்தில், ஆட்சியில் இருக்க வகை செய்யும் தீர்வு ஒன்றையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அதற்கு மாறாக வேறு எதற்கும் எவரும், எந்த நாடும் உடன்படக் கூடாது; உடந்தையாகவும் கூடாது. இது எமது வற்புறுத்தல்.

## மண்டேலாவை விடுவிக்குமாறு ராஜீவ் காந்தி கோரிக்கை

புதுடில்லி, ஜூன் 16

தென் ஆபிரிக்க கறுப்பு இனத்தலைவர் நெல்சன் மண்டேலாவை நிபந்தனையற்ற முறையில் விடுதலை செய்ய வேண்டும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இவ்வாறு அவசர வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

தென் ஆபிரிக்காவில் இனவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் திரு ராஜீவ் காந்தி தெரிவித்திருக்கிறார். (இ - எ)

போராட்டம் காரணமாக

## கர்நாடகத்தில் ரூ. 1 கோடி நஷ்டம்

புதுடில்லி, ஜூன் 16

கர்நாடக மாநிலத்தில் சென்ற 1ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் போராட்டத்தினால் இந்திய அரசுக்கு 1கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பெல்காமிலுள்ள குடிநீர் விநியோகத் திட்டத்தில் மட்டும் 22 லட்சம் ரூபாவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பல்வேறு பகுதிகளில் 47 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

மாநில போக்கு வரத்து சபைக்குச் சொந்தமான 40 பஸ்கள் எரிக்கப்பட்டன

இந்தபோராட்டத்தை கர்நாடக மாநில சம்யுத்த மகாராட்சிய சம்ஜி அமைப்பு நடத்தி வருகிறது (இ -5)

## அமெரிக்க வெளியீடுகள் இந்தோனேஷியாவில் மோசடி

வாஷிங்டன், ஜூன் 16

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் புத்தகங்கள், சஞ்சிகைகள் இசைத் தட்டுகள், திரைபட வீடியோ பிரதிகள் போன்றவற்றை இந்தோனேஷியாவில் ஒரு கோஷ்டி திருட்டுத்தனமாக மறுபிரதி செய்து மலிந்த விலையில் ஏராளமாக விற்று பெரும் பொருள் சம்பாதித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் அமெரிக்க அந்நிய செலாவணியில் பெரும் தொகை துண்டு விழுவதுடன், ரசிகர்களுக்கும் தரமான பிரதிகள் கிடைக்க முடியாமல் போய் விடுவதாக தெரிவிக்கப் படுகிறது. (இ - ஓ)

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக

# இராணுவ நடவடிக்கை வேண்டும்

## முகாபே அறைகூவல்

ஹராரே, ஜூன் 16

இனவாத தென் ஆபிரிக்க அரசுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

ஸிம்பாப்வே பிரதமரும் எதிர்வரும் செப்டம்பரில் அணிசேரா இயக்க நாடுகள் இயக்கத் தலைவராகத் தெரிவுசெய்யப்படவிருப்பவருமான திரு ரொபர்ட் முகாபே மேற்கண்டவாறு அறைகூவல் விடுத்தார்.

தென் ஆபிரிக்க இனவாத அரசுபத்து ஆண்டுகளுக்கு முன்னர் (17-6-1976) சுவெட்டோ நகரில் ஆயிரக்கணக்கான கறுப்பு இன மாணவர்களைச் சுட்டுக் கொலை செய்த ஞாபகார்த்த தினத்தை ஒட்டியே ஸிம்பாப்வே பிரதமர் மேற்கண்ட அறைகூவலை விடுத்தார்.

அணிசேரா இயக்கத்தின் தற்போதைய தலைவரும் இந்தியப் பிரதமருமான ராஜீவ் காந்தி தனது நினைவுதினச் செய்தியில்,

"தென் ஆபிரிக்காவின் இனவாதப் போக்கு விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றுக்காக உழைக்கும் சகலரும் தென் ஆபிரிக்க கறுப்பு இன மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும்' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

இந்தப் பத்தாவது நினைவு தினத்தை ஒட்டி கடந்த திங்கட்கிழமை கறுப்பு இன நாடுகளின் மாநாடு ஒன்று பாரிஸ் நகரில் ஆரம்பமானது.

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் இந்த மாநாட்டை ஒழுங்கு செய்து இருந்தது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சுவெட்டோ சம்பவத்தில் இனவாதக் கொள்கைக்கு எதிராக அமைதியான முறையில் இயக்கம் நடத்திய 350 மாணவர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து நடந்த ஆட்சேப ஊர்வலத்தில் கலந்து கொண்ட சுமார் 1,000 மாணவர், பொதுமக்கள்-படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (-எ)

## தீயணைப்பு வீரர் தீயில் வெந்தனர்!

லண்டன் ஜூன் 16

துருக்கியில் இடம் பெற்ற தீவிபத்து ஒன்றைத் தடுக்கப் போராடிய தீயணைப்பு படை வீரர்கள் 14 பேர் தீயில் வெந்து மடிந்தார்கள்.

நகரப்புறத்தில் இருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காடொன்றில் தீ பற்றியது. அதனை அணைக்க தீயணைப்புப் படையினர் வாகனங்களில் சென்றனர்.

காற்றுத் திடீரென மாறி வீசியதால் ஒரு வாகனத்தில் சென்ற 14 தீயணைப்பு வீரர் தீயில் சிக்கி வெந்து மாண்டனர். வாகனமும் எரிந்து சாம்பலாகியது.

## வெளி உலகில்

### ஐ. நா. படை

நிக்கோஷியா, ஜூன் 16

ஐ நா. அமைதி காக்கும் படையை சைப்பிரஸில் மேலும் ஆறு மாதங்கள் வைத்திருக்க ஐ. நா பாதுகாப்புச் சபை அனுமதித்துள்ளது (இ-ஒ)

### பறக்கும் தட்டுகள்

ரியோ, ஜூன்16

பறக்கும் தட்டுகள் போன்ற பொருள்கள் பிரேஸில் நாட்டில் தென்பட்டன.

இவற்றின் நடமாட்டத்தை அவதானிக்க 'எப் - 5' ரக அதிவேக விமானங்கள் மூன்றை பிரேஸில் அரசு வானத்தில் செலுத்திய போதிலும் சுமார் 320 கிலோ மீட்டர் தூரத்திற்கு மட்டும் தூரத்திச் செல்ல முடிந்தது.

பறக்கும் தட்டுகள் பின்னர் அத்திலாந்திக் சமுத்திரப் பகுதியில் மறைந்து விட்டன என்று 'எப் 5' விமானிகள் தெரிவித்தனர். (இ

# இந்தியாவில் 5 கோடி தமிழர் இருக்கிறார்கள்

### இதை மனதில் கொள்ள வேண்டும என்கிறார் அத்துலத்

கடந்த ஞாயிறு இரவு தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ரூபவாஹினியில் பத்திரிகையாளருக்கு பேட்டி அளித்தார். ராய்ட்டர் செய்திஸ்தாபனப் பிரதிநிதி டோல்டன் டி. சில்வா, 'த ஐலண்ட்' செய்தியாளர் அஜித் சமரநாயக்கா ஆகியோர் அமைச்சரைப் பேட்டி கண்டனர்.

அப்பேட்டி கேள்வி-பதில் வடிவில் இங்கு தரப்படுகின்றது.

கேள்வி: இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காணும் விஷயம் எந்தளவு முன்னேற்றம் கண்டுள்ளது?

பதில்: இந்தியாவுக்கு நாம் இரகசிய விளக்கங்களை அனுப்பியுள்ளோம். வேறு எந்த அரசும் விட்டுக் கொடுக்காத அளவுக்கு நாம் விட்டுக்கொடுத்துள்ளோம்

கேள்வி: இந்தியா பக்கச்சார்பாக நடக்கிறது என்று முன்னர் இலங்கை அரசு குற்றஞ்சாட்டியது. இப்போது இரகசிய விளக்கங்களை இந்தியாவுக்கு அனுப்பி உள்ளோம் என்று கூறுகிறீர்கள்? பக்கச்சார்பாக நடக்கும் நாட்டுக்கு எப்படி இரகசிய விளக்கங்களை அனுப்ப முடியும்? இது சரிவரக்கூடியதா?

பதில்: இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா எல்லாத் தரப்பினருடனும் தொடர்பு வைத்துள்ளது. இதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் இலங்கையிலும் இந்தியாவுக்கு அக்கறை உண்டு என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

இந்தியாவில் 5 கோடி தமிழர்கள் வசிக்கின்றனர் இதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

இந்தியாவில் ஒரு சிங்களவரும் வசிக்கவில்லை என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கேள்வி; இந்தியாவின் மத்தியஸ்த முயற்சி மட்டும் தேவை என்று இலங்கை அரசு கூறுகிறது. அதே நேரத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வகட்சி மாநாடு கூட்டப்படுகிறது இது இரண்டும் எப்படி ஒத்துப் போகும்?

பதில்: ஒரு பக்கம் இரகசியமாகப் பேச்சுக்களை நடத்தினாலும், இன்னொரு பக்கத்தில் எமது மக்களுக்கு நடப்பதை நாம தெரிவிக்கத்தானே வேண்டும்.

அதன் காரணமாகத்தான் சர்வகட்சி மாநாடு ஜூன் 25 இல் கூட்டப்படவுள்ளது.

அன்று இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இலங்கை அரசின் கொள்கைத்திட்டம் சகல அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்படும்.

அவர்கள் அந்த யோசனைகளை நன்றாகப் படிக்க வேண்டும். அதன் பின்னர் திருத்தங்கள், ஆலோசனைகளைத் தெரிவிக்கலாம்.

கேள்வி: இந்தியாவுக்கு அனுப்பியுள்ள புதிய விளக்கங்கள் பலனளிக்குமா?

பதில்: இனப்பிரச்சினைக்கு நிச்சயம் நாம் சமர்ப்பித்துள்ள புதிய இரகசிய விளக்கங்கள் தீர்வு காணும் என்று திடமாக நம்புகின்றோம்.

கேள்வி: மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும் என்றால் இருதரப்பிலும் ஆயுத நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் அல்லவா?

பதில்: ஆம். நாம் எத்தனையோ தரம் நிறுத்தி வைத்தோம் ஆனால் தீவிரவாதிகள் வேதாரணியம் பகுதிகளில் இருந்து ஆயுதங்கள் கொண்டுவருவதை நிறுத்தவில்லையே.

நாம் தீவிரவாதிகளுக்கு எதிராக பதில் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால், இவ்வளவுக்கும் ஈழம் நிறுவப்பட்டு இருக்குமே!

கேள்வி: இந்தியாவின் நல்லெண்ண உதவி பற்றி.

பதில்; இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சகல ... முன்னரே ... பேச்சு ... போடவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மற்றத்தரப்பார் அமைதியாக, ஒன்றுமே பேச திருக்க நாம் எல்லாத் துரும்புகளையும் வெளிக்காட்ட முடியுமா?

கேள்வி; வடக்கையும் இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டுவரவேண்டும் என்று முன்னர் கூறினீர்கள்? கொண்டுவர முடிந்துள்ளதா?

பதில்; கிழக்குப் பகுதியைத்தான் இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என்று கூறினேன்.

அண்மையில் நாம் வட பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் எமது முகாம்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. காங்கேசன்துறை,பலாலி பகுதிகளில் துருப்புக்கள் சுதந்திரமாக நடமாடக் கூடியதாக உள்ளது.

மண்டைதீவு முகாமும் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆனையிறவு நோக்கி துருப்புக்கள் நகர்த்தப்பட்டது திசைதிருப்பும் செயலே.

காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை பலாலி, தொண்டமானாறு, யாழ்ப்பாணம் முகாம்களைப் பலப்படுத்துவதற்காக அந்த திசை திருப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இல்லாவிடில் தீவிரவாதிகள் ஒரு பக்கத் தாக்குதலை மேற்கொண்டிருப்பார்கள்.

ஆனையிறவு ஊடாக துருப்புக்கள் நகர்த்தப்பட்ட செயலால் தீவிரவாதிகள் இரண்டு பக்கங்களுக்குப் பிரிந்து சென்று தாக்குதலை நடத்தினார்கள். இதனால் எமது நோக்கம் நிறைவேறியது.

கேள்வி: வடக்கு — கிழக்குப் பகுதிகளில் நிலவி வரும் சண்டை, கொழும்பு வரை வந்து விட்டதே! குண்டு வெடிப்புக்கள் கொழும்பிலும் இடம்பெறுகின்றனவே.

பதில்: குண்டுகளை வெடிக்க வைப்பது சண்டையா?

மக்களை ... அமைதியை ... கொண்டுவர ... ளும் முயற்சி இது. தீவிரவாதிகளின் தற்கொலைப் படைகள் இதில் ஈடுபடுகின்றன

இக்குண்டு வெடிப்புக்களைத் தடுத்து நிறுத்துவதற்காகத்தான் சிவில் பாதுகாப்பு ஆணையாளர் ஒருவரை நியமிக்க இருக்கின்றோம் திரு. லயனல் பெர்னாண்டோவைத் தான் அந்தப் பதவிக்கு மனதில் வைத்துள்ளோம். (இ-எ)



பொய்யாமொழி

குறள்:
இறல்ஈனும் எண்ணது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு.

பொருள்:
விளைவை எண்ணாமல் பிறர் பொருளை விரும்பினால் அஃது அழிவைத் தரும்; அப்பொருளை விரும்பாமல் வாழும் பெருமை வெற்றியைத் தரும்.

மாகாண சபைத் திணிப்பு:

## தமிழர் உணர்வுகளை ஆத்திரமூட்டுவதில்தான் முடியும்

### "டைம்ஸ் ஒவ் இன்டியா" கருத்து

புதுடில்லி, ஜூன் 16

மாகாண சபைத் திட்டத்தை ஒருதலைப்பட்சமாக அமுல் நடத்த இலங்கை அரசு முற்பட்டால் அது தமிழர் உணர்வுகளை ஆத்திரமூட்டுவதில்தான் முடியும்.

'டைம்ஸ் ஒப் இன்டியா' ஆங்கில நாளிதழில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் ஒன்றில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

எதிர்க்கட்சிகள் குழு ஒன்றை இந்தியா அனுப்ப வேண்டும் என்ற முடிவு தந்திரமானது.

இலங்கை எதிர்க்கட்சிக் குழுவை இந்திய மத்திய அரசு, மாநில அரசு ஆகியன அனுசரித்துப் போக வேண்டும் என்பதில் எந்த நியாயமும் இல்லை.

அப்படி அவை அனுசரித்து நடந்தால் திரு. ஜெயவர்த்தன சமாதானத்தை விரும்புகின்றார் என்பதைக் காட்டுவதில் தான் முடியும்.

இப்படி 'டைம்ஸ் ஒப் இன்டியா' தனது ஆசிரியர் தலையங்கத்தில் கூறியுள்ளது. (இ-எ-2)

## சமய சந்நிதிகளில்

### துர்க்காதேவி உற்சவம்

சாவகச்சேரி,ஜூன் 17

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அலங்கார உற்சவங்கள் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

26ஆம் திகதி அலங்கார உற்சவ பூர்த்தி மணவாளக்கோல விழா நடைபெறும்.

உற்சவக் காலங்களில் அருளுரைகள், திருமுறை பாராயணம். பஜனை. பிரார்த்தனை முதலிய பக்தி பூர்வமான நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகி இருக்கின்றன. (இ—31)

## ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன். 17

திருநெல்வேலி ராமகிருஷ்ணலயத்தின் ஆதரவில் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்திய யாழ் மாணவர்க்கான பேச்சுப்போட்டிகளில் பரிசு பெற்றோர் விவரம்:-

மேற்பிரிவு:

முதலாமிடம் வே. கல்பனா யூனியன் கல்லூரி. இரண்டாம் இடம். சே, விக்னேஸ்வரன் யூனியன் கல்லூரி மூன்றும் இடம், கு. வசந்தராணி இராமநாதன் கல்லூரி நான்காம் இடம் ப ஜெயந்தி யூனியன் கல்லூரி, கு. யசோதா யூனியன் கல்லூரி.

மத்திய பிரிவு:-

முதலாம் இடம் ஸ்ரீசாந்தினி இராமநாதன் கல்லூரி, இரண்டாம் இடம் இ. ஜெயலஷ்மி இராமநாதன் கல்லூரி, மூன்றும் இடம் செ. ரூபகாந்தி கொக்குவில் இந்துக் கல்லூரி, நான்காம் இடம் சி லோறன்ஸ் ஆனைக்கோட்டை தமிழ்க்கலவன் பாடசாலை, பா. சாயிஜனனி கொக்குவில் இந்துக் கல்லூரி

ராமகிருஷ்ணலய சுவாமிகள் தவத்திரு சித்ரூபானந்தா, திரு. எஸ். ரீசாரி திரு. தி. பி முத்து வேற்பிள்ளை, திருமதி. க. சிதம்பரநாதன் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமை புரிந்தனர். (இ-ஒ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆரம்பம்:
18 - 06 - 1986
**Bond Institution**
274/2, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.)

# உதயன்

17 — 06 — 1986 செவ்வாய்க்கிழமை

இலவச கருத்தரங்கும்
மாதிரி வினாவிடை வகுப்புகளும்
Open Seminar A Model Paper Classes
**Bond Institution**
274/2, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
பரீட்சைக்குத் தோற்றவிருக்கும், வடசெடல்களால் பாதிக்கப்பட்ட A/L Aug 1986 மாணவர்களுக்காக கருத்தரங்கும் மாதிரி வினாவிடை வகுப்பு இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## அடகு நகைகள் குறித்து மக்கள்வங்கி வடபிரதேச முகாமையாளர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17
மக்கள் வங்கி யாழ் பிரதான வீதிக் கிளை, வல்வெட்டித்துறைக் கிளை ஆகியவற்றில் அடகு வைக்கப்பட்ட நகைகளை ஜூன் 6, 7, 8ஆம் திகதிகளில் மீட்கத் தவறியவர்கள் ஜூன் 20, 22 ஆம் திகதிகளில் அவைகளை மீட்டு எடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினங்களில் நகைகளைத் திரும்பப் பெற விரும்புபவர்கள் குறித்த கிளைகளின் முகாமையாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

மக்கள் வங்கி வட பிரதேச முகாமையாளர் மேற்கண்ட தகவலை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (இ-எ)

### ஈக்கள் ஏற்றுமதி

கென்யா, ஜூன் 16
ஈக்களையும் கென்யா ஏற்றுமதி செய்கின்றது.

மாதம் ஒரு தடவை கொள்கலனில் ஈக்கள் அடைக்கப்பட்டு விமானம் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

23 நாடுகளுக்கு இப்படி கென்யா நாட்டு ஈக்கள் பறக்கின்றன.

தூண்டிலில் போட்டு மீன் பிடிப்பவர்கள் இரையாக ஈக்களை வெளிநாடுகளில் பயன்படுத்துகின்றனர். (இ-எ)

### கைலாசபதி கலையரங்கில் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 17
வணிக, புவியியல் மாணவ மன்றங்களின் ஆதரவில் "தெற்காசிய சூழலில் இலங்கையின் இனப்பிரச்சினை" என்ற தலைப்பிலான ஆய்வரங்கு ஒன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

ஆய்வரங்கில் திரு. பாலச்சந்திரன் (தலைவர், புவியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்), திரு. திருநாவுக்கரசு (விரிவுரையாளர், வரலாற்றுத் துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோர் பிரதான உரைகளை நிகழ்த்துவர். (இ)

### வெளியூர்.:

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தீவுப்பகுதி ஆசிரியர் பற்றுக்குறையை நிவர்த்தி செய்ய தமது பிறந்த மண்ணில் சேவையாற்ற முன்வரவேண்டும்.

தீவுப்பகுதியைச் சொந்தமாகக்கொண்ட ஆசிரியர்கள் சுலபமாக யாழ் நகருக்கு இடமாற்றம் பெற்று விடுகின்றனர்.

ஆனால் பிற இடங்களில் இருந்து சென்று தீவுப்பகுதியில் பல ஆண்டுகளாகக் கடமை புரிபவர்கள் இடமாற்றம் பெற எடுக்கும் முயற்சிகள் புறக்கணிக்கப்படுகின்றன. இதனை நாம் கண்டிக்கிறோம்.

இத்தீர்மானங்கள் நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

இவற்றைச் செயற்படுத்த திரு. பொ. பாலச்சந்திரனைத் தலைவராகக் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப் பட்டது.

செயற்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் வருமாறு: திரு. என். வன்னியசிங்கம் (செயலாளர்) திரு ஞான திருக்கேதீஸ்வரன், செல்வி எம், மங்களகௌரி, திருமதி ஏ, தனபாலசிங்கம், (இ-எ)

### கிளிநொச்சி:::

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஊடாக நடைபெறவில்லை

வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் நேற்று பரந்தனுடன் திரும்பி வந்தன. (இ-10)

# மண்டைதீவு மகாவித்தியாலயம் இயங்க முடியாத நிலை

## வெளியூர் ஆசிரியர்கள் செல்ல அச்சம்
## இடம் பெயர்ந்த மாணவரும் திரும்பவில்லை

மண்டைதீவு, ஜூன் 17
மண்டைதீவு மகாவித்தியாலயம் இயங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது வெளியூர் ஆசிரியர்கள் அங்கு செல்வதற்கு அஞ்சுகின்றனர். பீதியால் இடம்பெற்ற மாணவர்களிலும் பலர் இன்னும் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை

மண்டைதீவுப் பகுதியில் தொடர்ந்தும் அச்சமும் பதற்றமும் நிலவி வருகின்றன.

அத்தோடு உணவுத் தட்டுப்பாடும் அங்கு ஏற்பட்டுள்ளது

மண்டைதீவு மகாவித்தியாலயத்தை சிறிது காலம் மூடுவது புத்திசாலித்தனமானது என்று பெற்றோர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இதுசம்பந்தமாக மண்டைதீவு பிரஜைகள் குழுவும் கல்விப் பணிப்பாளரைக் கோரியுள்ளது.

இது இவ்வாறிருக்க மண்டைதீவு மகாவித்தியாலய அதிபர் சு. சண்முகநாதனும் சில ஆசிரியர்களும் நேரில் சென்று நிலைமையை அறிவதற்காக மண்டைதீவு சென்றுள்ளனர். (இ-88)

### இலங்கை அரசுக்கு உணவு
## கைதானோரில் சிலர் வெளிநாட்டவராம்

புதுடில்லி, ஜூன். 16
இலங்கை அரசுக்கு உளவுவேலைபார்த்து வந்தார்கள் என்ற சந்தேகத்தில் தமிழ்நாட்டுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் சிலர் வெளிநாட்டவர்கள்.

இப்படி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது

இந்த வெளிநாட்டவருக்கும் உள்ளூர் வாசிகளுக்கும் இடையே தொடர்பு இருந்து வந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாம். (இ-எ-2)

## தமிழருக்காகக் குரல் கொடுப்பேன் என்கிறார்
### புதிய கலவான எம். பி

கொழும்பு, ஜூன் 17
தமிழருக்கு அநீதி என்றால் நான் குரல் எழுப்பத் தயங்கேன்

கலவான புதிய எம்.பி. திரு. டி யூ குணசேகரா மேற்கண்டவாறு சொன்னார்.

நாடாளுமன்றம்ஜூன் 19இல் கூடும் போது திரு டியூ குணசேகரா சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்.

திரு. டியூ குணசேகரா மேலும் சொன்னதாவது;

சிறுபான்மை மக்களுக்காகவும், தொழிலாளவர்க்க நலனுக்காகவும் நாடாளுமன்றத்தில் என் குரல் ஒலிக்கும்.

மறைந்த சரத் முத்தெட்டுவேகம விட்டுச் சென்ற பணியை சிறப்பாகத் தொடர்ந்து பணியாற்றுவேன்.

இப்படி திரு டியூ குணசேகரா சொன்னார். (இ-எ-2)

### 19 வயது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பற்றி விசாரித்து மாணவரை மட்டும் வைத்துக் கொண்டு மீனவரையும் விவசாயிகளையும் சிப்பாய்கள் விடுவித்தனர்.

சிலநிமிஷ நேரத்தின் பின்னர் மாணவனைத் தனியே விசாரித்து விட்டு அவரை ஓடும்படி கட்டளையிட்டு தலையில் சுட்டனர்.

அவ்விடத்திலேயேதுடிதுடித்து இறந்த மாணவனின் உடலை இளைஞர்களின் உதவியுடன் உறவினர்கள் எடுத்துச் சென்றார்கள்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து வளலாய்-பலாலி வீதி போராளிகளினால் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகிறது. (இ-119)

### கொழும்பில் தமிழரின் வீடு கொள்ளை

கொழும்பு, ஜூன் 17
கொழும்பு, கறுவாக்காட்டுப் பகுதியில் வசிக்கும் தமிழர் ஒருவரின் வீடு கொள்ளையடிக்கப்பட்டது அத்துடன் அவரின் காரும் கடத்தப்பட்டது

வீட்டுக்காரர் வெளியே சென்று இருந்த சமயம் இச்சம்பவம் இடம் பெற்றது.

கடத்தப்பட்ட கார், பின்னர் பம்பலப்பிட்டியில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. (இ-எ-2)

### மயிலிட்டி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ணம் வீதியை நோக்கி வந்தனர். இதனால் பெரும் பதற்றம் நிலவியது.

போராளிகளும் தாக்குதலுக்கு ஆயத்தமாகினர்.

ஆனால் சிப்பாய்கள் திரும்பி பருத்தித்துறை வீதியை அடைந்து பலாலி சென்றனர். (இ-5-68)

### மண்டைதீவு:.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
மில் இருந்தும் ஷெல் தாக்குதல் மேற் கொள்ளப் பட்டது.

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் செய்தி அச்சுக்கு போகும் வரை கிடைக்கவில்லை. (இ-10)

## வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளை உடுப்பிட்டியில்

கரவெட்டி, ஜூன் 17
வல்வெட்டித்துறை மக்கள் வங்கி உடுப்பிட்டிக்கு மாற்றப்பட்டு விட்டது.

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி கடந்தமாதம் விமானத் தாக்குதலினால் சேதமாக்கப் பட்டது.

இதன் காரணத்தால் வங்கிக்கிளை உடனடியாக உடுப்பிட்டிக்கு மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப் பட்டன. எனினும் மக்கள் இதற்கு அப்போது அனுமதிக்கவில்லை.

இதனால் சிலநாட்களாக வல்வெட்டித்துறை மக்கள் வங்கி இயங்கவில்லை

இதைக் கவனத்தில் கொண்ட மக்களும் பிரஜைகள் குழுவும் வங்கி மாற்றுவதற்கு சம்மதம் அளித்தனர். வங்கி ஊழியர்களினதும் வாடிக்கையாளர்களினதும் பாதுகாப்பு கருதி உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கக் கட்டடத்தின் ஓர் பகுதிக்கே வங்கிக்கிளை மாற்றப் பட்டது

கிளை இங்கு தற்காலிகமாகவே இயங்கும் எனவும் அறிய வந்துள்ளது. (உ - 70)

### தகவல் கொடுத்ததாக மூவர் விசாரணை

ஊர்காவற்றுறைஜூன்17
காரைநகர் கடற்படை முகாமுக்கு, போராளிகளின் நடவடிக்கைகள், மற்றும் நடமாட்டங்கள் பற்றி தகவல் கொடுத்தார்கள் என்ற சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டனர்

ஊர்காவற்றுறையில் கைது செய்யப்பட்ட இவர்கள் நீண்ட நேர விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்

இவர்களின் நாளாந்த நடமாட்டம் தங்கள் அங்கத்தவர்களால் அவதானிக்கப்படும் என போராளிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது (இ-16)

### ஓமந்தை...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)
பட்ட சில வாகனங்களையும் தம்முடன் முகாம் வரை கூட்டி வந்தனர்.

அவர்கள் நடந்து வந்த போது இடையிடையே துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப் பட்டன

கவச வாகனங்களும் பீரங்கி வாகனங்களும் முன்னே செல்ல சிப்பாய்கள் காடுகளுக்குள்ளால் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தனர். (இ-10)

### வல்வெட்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ந்து அகதிகளாக வந்து வல்வெட்டித்துறையில் உள்ள குடியேற்றப்பகுதியில் வீடுகளை அமைத்து நிம்மதியாக வாழ்ந்து வந்த மக்களும் இச்சம்பவத்தின்போது அகதிகளாக கரணவாய் தாமோதரம் வித்தியாலயத்தில் உள்ளனர்.

வல்வெட்டித்துறையில் உள்ள குடியேற்றத் திட்டம் படைகளினால் தாக்கப்பட்டு வீடுகள் எரிக்கப்பட்டதை அடுத்தே திருகோணமலை வாசிகள் மீண்டும் அகதிகளாக்கப் பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறைச் சம்பவத்தின் போது அதிகமான உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்றும் இதற்குக் காரணம் பதுங்கு குழிகளே என்றும் மக்கள் கூறுகின்றனர்.

பீரங்கி, ஷெல், விமானக்குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்ற அந்த இரண்டு நாளும் பதுங்கு குழிகளினுள் இருந்ததாலேயே இவ்வளவு பெரிய தாக்குதல்களிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது என்று பலரும் தெரிவித்தனர். (இ-157)

# விளையாட்டரங்கு

## சென்ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் ஜூன் 17
15 வயதுப் பிரிவிற்கான கிரிக்கெட் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸால் வெற்றிபெற்றது.

இந்த அணி யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியைத் தோற்கடித்தது

சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி தனக்கு ஒதுக்கப்பட்ட 180 நிமிடத்தில் 9 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது.

எம். பி. இராசநாயகம் 55 ஓட்டங்களையும் ஏ ஜே ஜஸ்ரின் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ் சுதாகர் 3 விக்கெட்டுகளையும் ரி. சதீசன், ஈ. எக்ஸ். அஜித் லக்ஸ்மன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும். சுரேஷ் பாலன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 8 விக்கெட்டுகளை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றபோது குறிக்கப்பட்டநேரம் முடிவடைந்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

எஸ். என். புவனரத்தினம் ஆட்டம் இழக்காமல் 51 ஓட்டங்களையும் எஸ். சுதாகர், எஸ். சுதேஸ் ஆகியோர் முறையே 26, 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஏ. ஜே. ஜஸ்ரின், எம். பி. ராஜநாயகம் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், சி கே ஆனந்தகுமார் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டிக்கு திரு-கனகலிங்கம், திரு. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். (இ-7)

## சென்பற்றிக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு எதிரான 17 வயது பிரிவு கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸால் வெற்றி பெற்றது

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது,

முதல் துடுப்பெடுத்தாடிய பற்றிக்ஸ் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது.

ஏ எம் நிர்மலராஜா அபாரமாக ஆடி 77 ஓட்டங்களையும் வி. ஆர். திலக்ராஜ், எம். எஸ் வோல்மான், சி. ஆர். ஜெயவேதிரா ஆகியோர் முறையே 20, 21, 22 ஓட்டங்களையும் பெற்றனர்

பி. ரவி ராஜன் 4 விக்கெட்டுக்களையும், எஸ். ஜெயசங்கர் 2 விக்கெட்டுக்களையும், ரி சஞ்சீவன், என். ரகுராம் பி. அகிலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 175 ஓட்டங்களைப் பெற்றுச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது

என். அரவிந்தன், எஸ். ஜெயசங்கர் எஸ். என். புவனரத்தினம் ஆகியோர் முறையே 40, 30, 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

வி. ஆர் திலக்ராஜ் 3 விக்கெட்டுக்களையும், என். ஆர். ஆனந்தராஜா, ஜி. எஸ். சவரிமுத்து ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்

## றிம்மர் அணிக்கு வெற்றிக்குமேல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் றோட்டரிக் கழக ஆதரவில் நடைபெற்ற கூடைப்பந்தாட்ட போட்டிகளில் முதலாவது போட்டியில் றிம்மர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்பற்றிக் கல்லூரி அணி மோதியது

இப் போட்டியில் றிம்மர் விளையாட்டுக் கழகம் 29 புள்ளிகளையும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 24 புள்ளிகளையும் பெற்றது

சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் றிம்மர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது

இரண்டாவது போட்டியில் றிம்மர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ் பல்கலைக் கழக அணி மோதியது

இப் போட்டியில் றிம்மர் விளையாட்டுக் கழகம் 32 புள்ளிகளையும் யாழ் பல்கலைக் கழக அணி 26 புள்ளிகளையும் பெற்றது.

யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் றிம்மர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது (இ)

தொடர்ந்த இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 15 ஓட்டங்களைப்பெற்ற போது ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஜி. எஸ். சவரிமுத்து ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக டி. எம். வேதாபரணம் ஆர். செல்வரத்தினம் ஆகியோர் கடமையாற்றினர்.

## முக்கொலைகளின் சூத்திரதாரிகளான இருவருக்கு புலிகள் தண்டனை

பலாலி, ஜூன் 17
நேற்று பகல் 11 மணியளவில் மல்லாகம் சந்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் இருவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கடந்த வாரம் அளவெட்டிக்கும் மல்லாகத்துக்கும் இடையில் நால்வர் இரவில் சில இளைஞர்களினால் அழைத்துச் செல்லப்பட்டனர் பின்பு அவர்களில் மூவர் கொலை செய்யப்பட்டனர்

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எனக்கருதப்படும் இருவர் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

கடந்தவார முக்கொலைகளுக்கு கைது செய்யப்பட்ட இளைஞர்களே காரணமென நிரூபிக்கப்பட்டதால் அவ்விருவருக்கும் மரணதண்டனை வழங்கப்படுவதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (இ-119)

### ஊர்காவற்றுறை வங்கி மீண்டும் இயங்குகிறது.

கடந்த ஒரு மாத காலமாக இயங்காமலிருந்த ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக்கிளை கடந்த வாரம் முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

தீவுப்பகுதிக்குரிய போக்குவரத்து வசதிகள் சீர்குலைந்ததனால் வங்கி அதிகாரிகள் பலர் யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு கடமைக்கு சமுகமளிக்க முடியாதிருந்தது.

தற்போது இக் கிளையில் பணம் கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த மற்றைய அனைத்துக் கருமங்களும் நடைபெறுகின்றன என்று வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (இ-16)

**WANTED**

**1. SITE AGENT**
— Wanted urgently for a large Water Supply Project in Mannar a Civil Engineer, with 10 years post qualification experience, to be in charge of the project. He should report to the project Manager Civil Engineering Department at Head Office in Colombo regarding the progress of work etc

**2. SITE ENGINEER**
— Civil Engineer with 5 years post qualification experience.

Salary for the above two posts are negotiable Kindly apply giving full details of past experience to the Area Manager, Samuel Sons & Co Ltd., 206, Hospital Road, Jaffna. Telephone: 22462 24398

**WANTED**

**LABOUR CONTRACTOR**

Wanted for a large Water Supply Project in Mannar, an experienced Labour Contractor The sites are at Murunkan, Adampan, Vankali and Mannar. The duration of work will be for about an year. Main jobs will be laying of pipes, excavation of earth, building etc. All material, machinery and equipment will be provided by the firm Work will be supervised by our Engineers. For further details please contact our Area Manager at our Jaffna Branch.

SAMUEL SONS & CO. LTD.,
206, Hospital Road, Jaffna.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 17—6—1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane, Power House Road JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under Number Q J 60 Wyg

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org